# தவக்காலம் இரண்டாம் ஞாயிறு

# இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

# 2024-02-25

(*இன்றைய வாசகங்கள்:*

*தொடக்க நூலிலிருந்து வாசகம்* 22: 1-2, 9-13, 15-18,

*திருப்பாடல்* 116: 10,15. 16-17. 18-19 ,

*திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 8: 31b-34 ,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 9: 2-10 )

*திருப்பலி முன்னுரை*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! நீதியையும் நேர்மையையும் விரும்புகின்ற நம் இறைத்தந்தையின் திருப்பெயரால் நல்வாழ்த்துகள் கூறி இத்திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று நாம் தவக்காலம் இரண்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம். கடவுள் ஆபிராமை அழைப்பதையும், அவருக்கு ஆசீர்வாத வாக்குறுதிகளை வழங்குவதையும் இன்றைய முதல் வாசகம் நமக்கு விளக்கிக் கூறுகின்றது. அதன் வழியாக இறைவனுடைய அழைப்பிற்கு தகுந்தமுறையில் கீழ்ப்படிபவர்களுக்கு ஆண்டவர்தாமே பக்கபலமாய் இருப்பார் என்ற உறுதியான செய்தியொன்றும் நமக்குத் தரப்படுகின்றது. அத்தோடு இன்றைய நற்செய்தியில், இயேசு தோற்றம் மாறும் நிகழ்வும் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றது. இத் திருப்பலியில் பங்கேற்கும் நாமும் ஆபிராமைப் போல் கீழ்ப்படிதலும், நம்பிக்கையும் உள்ளவர்களாயும், இறையன்பை நமது முன்மாதிரிகையான வாழ்வு வழியாகப் பிறருக்கு அறிவிக்கும் உண்மையான சீடர்களாயும் வாழ இத்திருப்பலியில் வல்லமை கேட்டுச் செபிப்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*துணையும் கேடயமுமான தந்தையே இறைவா!*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் உம்முடைய திருவுளத்தையும், அழைப்பையும் நன்கு உணர்ந்தவர்களாய் உமக்கு என்றும் கீழ்ப்படிந்து உண்மைச் சீடர்களாய் அர்ப்பணிப்போடு செயலாற்றுவதற்கு வேண்டிய வலிமையை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*நீதியையும் நேர்மையையும் விரும்புகின்ற தந்தையே இறைவா!*

*இறைமக்களாகிய நாம், நீதியையும் நேர்மையையும் விரும்புகின்ற மக்களாயும் கீழ்ப்படிதலும், நம்பிக்கையும் உள்ளவர்களாயும், இறையன்பை எமது முன்மாதிரிகையான வாழ்வு வழியாகப் பிறருக்கு அறிவிக்கும் உண்மையான சீடர்களாயும் வாழ உதவிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உமது பேரன்பால் பூவுலகை நிறைக்கும் தந்தையே இறைவா!*

*அமைதியிழந்து தவிக்கும் இந்த உலகிற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும், உறவையும் அளித்திட வேண்டுமென்று எமக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

வாழ்வை வழங்கும் தந்தையே இறைவா!

இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பு நாள் என்று அழைத்தீரே. நாங்கள் கிறிஸ்துவின் தூதர்களாய் இருக்கிறோம் என்பதை உணர்ந்து, இத்தவக்காலத்தை நன்கு பயன்படுத்திக் கடவுளோடு ஒப்புரவாகி, இயேசு கிறிஸ்துவிற்கு ஏற்படையவர்களாய் மாற நல்ல மனநிலையைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!

எங்களை பராமரித்து பாதுகாத்த எம் பெரியவர்கள் இன்று ஆதரவின்றி, அனாதைகளாக்கப்பட்டு, தெரு ஓரங்களிலும், பேருந்து நிலையங்களிலும் முதியோர் இல்லங்களிலும் தனித்து விடப்பட்டு , அவர்கள் படும் வேதனைகள் தொடர் நிகழ்வாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே அவர்கள் உம் இறை இரக்கத்தினால்,பாதுகாப்புடன் வாழ, இத்தலைமுறையினர் பெரியவர்கள் மேன்மையை உணர்ந்து அவர்களை பாதுகாக்க தேவையான அருளை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எம்மை அரவணைக்கும் எம் இறைவா!

உலகிற்கு, உப்பாக ஒளியாக விளங்கிட, எம் குடும்பங்களை அர்ப்பணிக்கின்றோம். இன்று குடும்ப உறவுகளில் நிலவும் பிரச்சினைகள், வேறுபாடுகள், தனிகுடும்ப வாழ்வு, பெற்றோர்களால் தனித்து விடப்படுதல் போன்ற இவைகளிலிருந்து அனைத்தும் மாற்றம் பெற்று ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு மன்னித்து வாழக்கூடிய நல்ல மனதினை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அனைவரையும் சாவினின்று காக்கும் தந்தையே இறைவா!

உலகில் இன்று வேகமாகப் பரவி வரும் எல்லாவிதமான கொடிய நோயிலிருந்தும் அனைவரையும் காத்து, நல்ல உடல் நலத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.